**செப்டம்பர் – 10**

# TNPSC துளிகள்

- நூலாசிரியர் அமிஷ் திரிபாதி இந்திய வரலாற்றுத் தொடரின் பகுதியான "The Chola Tigers: The Avengers of Somnath, part of the Indic Chronicle series" என்ற தனது புதியப் புத்தகத்தினை சென்னையில் வெளியிட்டார்.
- INS திர், INS ஷார்துல் மற்றும் ICGS சாரதி ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தியக் கடற்படையின் முதல் பயிற்சிப் படையானது (1TS), அவற்றின் பயிற்சிப் பணிக்காக செஷெல்ஸின் போர்ட் விக்டோரியா துறைமுகத்தினை வந்தடைந்தது.
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தினால் TULIP அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட ஷில்ப் சமகம் மேளா 2025 ஆனது செப்டம்பர் 05 ஆம் தேதியன்று பெங்களூருவின் சுதந்திரப் பூங்காவில் தொடங்கப்பட்டது.
- இந்தியத் தனித்துவ அடையாள ஆணையமானது (UIDAI) ஆகஸ்ட் மாதத்தில், 18.6 கோடி செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முக அடையாளச் சரிபார்ப்புகளுடன் சேர்த்து, 221 கோடிக்கும் மேற்பட்ட ஆதார் அங்கீகாரங்களைப் பதிவு செய்தது என்பதோடு இது அதிகரித்து வரும் டிஜிட்டல் ஏற்பு மற்றும் பாதுகாப்பான அடையாளப் பயன்பாட்டைப் பிரதிபலிக்கிறது.
- பீகாரின் ராஜ்கிரில் அமைக்கப்பட்டுள்ள பூடான் அரசப் புத்தக் கோவிலானது பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- டெல்லியில் நடைபெற்ற 20வது உலகளாவிய நிலைத்தன்மை உச்சி மாநாடு ஆனது, சிறப்பு நிலையான மேம்பாட்டு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
    - வணிகம் மற்றும் கொள்கைக் கட்டமைப்புகளில் நிலைத்தன்மையை ஒருங்கிணைப்பதன் மூலம் உள்ளடக்கிய, நெகிழ்திறன் மற்றும் நிலையான மேம்பாட்டினை ஊக்குவிப்பதை இந்த உச்சிமாநாடு நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும், கட்டிடக்கலை மற்றும் பொறியியலின் இந்த உயரமான அதிசயங்களைக் கொண்டாடுவதற்காக செப்டம்பர் 03 ஆம் தேதியன்று வானளாவிய கட்டிடங்கள் (ஸ்கைஸ்க்ரேப்பர்) தினம் அனுசரிக்கப்படுகிறது.


# தேசியச் செய்திகள்

## UPI பரிவர்த்தனை வரம்புகள்

- இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகம் (NPCI) ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் குறிப்பிட்டச் சரி பார்க்கப்பட்ட வணிக வகைகளுக்கான UPI வரம்புகளை அதிகரித்துள்ளது.
- மூலதனச் சந்தைகள், காப்பீடு மற்றும் அரசு இணையதளச் சந்தைக்கான ஒரு பரிவர்த்தனை வரம்பு 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டு உள்ளது.
- இந்த வகைகளுக்கான 24 மணி நேர ஒட்டுமொத்தப் பரிவர்த்தனை வரம்பு தற்போது 10 லட்சம் ரூபாயாக உள்ளது என்பதோடு இது முந்தைய குறைந்தபட்ச வரம்புகளிலிருந்து அதிகரித்துள்ளது.
- கடன் அட்டை சார்ந்த கொடுப்பனவுகளுக்கான வரம்பு தற்போது, ஒரு பரிவர்த்தனைக்கு 5 லட்சம் ரூபாயாகவும், UPI வழியான பரிவர்த்தனைக்கு ஒரு

நாளைக்கு 6 லட்சம் ரூபாயாகவும் உள்ளது.

- ❖ கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் EMI போன்ற வசூல்களுக்கும் ஒரு பரிவர்த்தனைக்கு 5 லட்சம் ரூபாய் மற்றும் ஒரு நாளைக்கு 10 லட்சம் ரூபாய் வரம்பு உள்ளது.
- ❖ சரி பார்க்கப்பட்ட வணிகர்களுடனான ஒரு நபரிடமிருந்து வணிகருக்குப் பரிமாற்றப் படும் (P2M) பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே இந்த வரம்புகள் பொருந்தும்; இரு நபர்களுக்கிடையேயான (P2P) பரிவர்த்தனைகளுக்கான வரம்புகள் 1 லட்சம் ரூபாயாகவே உள்ளன.





## பருப்பு வகைகள் துறையில் ஆத்மநிர்பாரதா

- ❖ நிதி ஆயோக் அமைப்பானது, "Strategies and Pathways for Accelerating Growth in Pulses towards the Goal of Atmanirbharta/ஆத்மநிர்பாரதா இலக்கை நோக்கி பருப்பு வகைகள் துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான உத்திகள் மற்றும் பாதைகள்" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- ❖ இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத், ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா முழுவதும் 885 விவசாயிகளின் கள ஆய்வின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தியா பருப்பு வகைகளை உற்பத்தி செய்யும் உலகின் மிகப்பெரிய நாடாகவும், நுகர்வோராகவும் உள்ளது என்பதோடு உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலையான முறையிலான விவசாயத்திற்கு இது மிகவும் முக்கியமானதாகும்.
- ❖ 2015–16 ஆம் ஆண்டில் 16.35 மில்லியன் டன்னாக இருந்த பருப்பு உற்பத்தியானது, 2022–23 ஆம் ஆண்டில் 26.06 மில்லியன் டன்னாக உயர்ந்தது என்பதோடு இது இறக்குமதியின் சார்ந்திருக்கும் நிலையினை 29 சதவீதத்திலிருந்து 10.4% ஆகக் குறைந்தது.
- ❖ 2025–26 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதி ஒதுக்கீட்டில் துவரம் பருப்பு, உளுந்து மற்றும் பயறு வகைகளில் கவனம் செலுத்தி, பருப்பு வகைகளில் தன்னிறைவு பெற்ற இந்தியாவிற்கான/ஆத்மநிர்பாரதத்திற்கான திட்டம் அறிவிக்கப்பட்டது.
- ❖ இந்த அறிக்கையானது, 2030 ஆம் ஆண்டில் பருப்பு உற்பத்தி 30.59 மில்லியன் டன்னையும் 2047 ஆம் ஆண்டில் 45.79 மில்லியன் டன்னையும் எட்டும் என்று கணித்து உள்ளது.
- ❖ முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலங்களைப் பயன்படுத்தி கிடைமட்ட

விரிவாக்கம் மற்றும் விளைச்சல் மற்றும் வேளாண் நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் செங்குத்து விரிவாக்கம் ஆகியவை இந்த உத்தியில் அடங்கும்.

- மாவட்ட வாரியான தொகுதியாக்கம், உயர்தர விதைகளை ஏற்றல் மற்றும் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட "ஒரு தொகுதி-ஒரு விதை கிராமம்" மையங்களை இது பரிந்துரைக்கிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் பருப்பு வகைகளின் உள்நாட்டு விநியோகத்தினை 48.44 மில்லியன் டன்னாகவும், 2047 ஆம் ஆண்டுக்குள் 63.64 மில்லியன் டன்னாகவும் அதிகரிப்பதே இதன் இலக்காகும்.




## அங்கிகார் 2025




- அங்கிகார் 2025 பிரச்சாரம் ஆனது பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா - நகர்ப்புற 2.0

திட்டத்தின் கீழ் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டது.

- விழிப்புணர்வை ஏற்படுத்துதல், விண்ணப்பங்களை விரைவாக சரிபார்த்தல் மற்றும் அனுமதிக்கப்பட்ட வீடுகளை விரைவாக முடிப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- PMAY-U திட்டத்தின் கீழ் 1.2 கோடிக்கும் அதிகமான வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்ற நிலையில் ஏற்கனவே 94 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- சமூக அணி திரட்டல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு மூலம் மீதமுள்ள வீடுகளுக்கான அனுமதியை வழங்குவதை இந்தப் பிரச்சாரம் ஆதரிக்கும்.
- நகர்ப்புற வீட்டுவசதிப் பயனாளிகளுக்குமான திட்டத்தின் கடைநிலைப் பலன் வழங்கல் மற்றும் முழுமையான மேம்பாட்டினை உறுதி செய்வதில் இது கவனம் செலுத்துகிறது.

## TPCR திட்டம் -2025




- இந்தியா 15 ஆண்டு காலப் பாதுகாப்புத் துறை தயார்நிலை செயல்திட்டமான 2025 ஆம் ஆண்டு தொழில்நுட்ப முன்னோக்கு மற்றும் திறன் செயல் திட்டத்தினை (TPCR-2025) வெளியிட்டுள்ளது.
- நடமாடும் மாசு நீக்க அலகுகள் மற்றும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு உள் கட்டமைப்பு உள்ளிட்ட நம்பகமான அணுசக்தி தடுப்புக்கான நடவடிக்கைகளை இந்த செயல் திட்டம் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இதில் CBRN (வேதியியல், உயிரியல், கதிரியக்க மற்றும் அணுசக்தி) உளவு நடவடிக்கைகளுக்கான ஆளில்லா நிலம் சார் வாகனங்கள் அடங்கும்.
- NBC உணர்வுக் கருவிகள் மற்றும் மின்னணுப் போர்க் கருவிகள் பொருத்தப்பட்ட 1,500 கிலோ மீட்டர் தாக்குதல் வரம்பு மற்றும் 60,000 அடி உயரத்தில் இயங்கக் கூடிய ரேடாருக்குப் புலப்படாத ஆளில்லா விமானங்களை உருவாக்க இராணுவம் திட்டமிட்டு உள்ளது.
- TPCR-2025 திட்டத்தில் இலக்கினைக் குறி வைத்துத் தாக்கும் ஆயுத அமைப்புகள்,

செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்பட்ட இலக்கு அமைப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த கண்காணிப்பு ஆளில்லா விமானங்கள் ஆகியவை அடங்கும்.

- எதிரி நாட்டு ஆளில்லா விமானத் திரள்களை எதிர்கொள்வதற்காக 15 கிலோ மீட்டர் தாக்குதல் வரம்பு கொண்ட மின்னணுக் கருவிகளின் செயல்பாட்டுத் தடுப்பு அமைப்புகள் மற்றும் தகவமைப்பு சார்ந்த செயல்பாட்டு முடக்க அமைப்புகளை இது முன்மொழிகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா மற்றும் சிங்கப்பூர் இடையிலான அரசுமுறைக் கூட்டாண்மை




- வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான/ஆழப்படுத்துவதற்கான ஓர் உத்தி சார் செயல் திட்டத்தினை வெளியிட்டு இந்தியாவும் சிங்கப்பூரும் அவற்றின் அரசுமுறை உறவுகளின் 60 ஆண்டுகால நிறைவினைக் கொண்டாடுகின்றன.
- இந்தத் திட்டமானது, பசுமைத் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் நிதி உட்பட எட்டு முக்கியப் பகுதிகளில் அவற்றின் விரிவான உத்தி சார் கூட்டாண்மையை விரிவுபடுத்துகிறது.
- இந்தக் கூட்டாண்மை, புதிய மாணவர் திட்டங்கள் மற்றும் சென்னையில் ஒரு தேசிய மேம்பட்ட உற்பத்திக்கான சிறப்பு மையத்துடன் மக்களிடையேயான உறவுகளை வலியுறுத்துகிறது.

## அத்தியாவசிய மருந்துகள் 2025

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, அத்தியாவசிய மருந்துகளின் 24வது மாதிரிப் பட்டியலையும் (EML) குழந்தைகளுக்கான 10வது பட்டியலையும் (EMLc) வெளியிட்டது.
- அவசரப் பொது சுகாதாரத் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில், வயது வந்தவர்களுக்கான பட்டியலில் இருபது புதிய மருந்துகளும், குழந்தைகளுக்கான பட்டியலில் பதினைந்து புதிய மருந்துகளும் சேர்க்கப்பட்டன.
- உலகளாவிய உயிரிழப்பிற்கு இரண்டாவது முக்கியக் காரணமாக புற்றுநோய் உள்ளது என்ற நிலையில் இதனால் ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட சுமார் 10 மில்லியன் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

- தீவிர மதிப்பீட்டிற்குப் பிறகு, குறைந்தது 4 முதல் 6 மாதங்கள் வரை ஆயுளை நீட்டிக்கும் என்று நிரூபிக்கப்பட்ட புற்றுநோய் மருந்துகள் மட்டுமே இப்பட்டியலில் சேர்க்கப் பட்டன.
- மெட்டாஸ்டேடிக் கர்ப்பப்பை வாய், பெருங்குடல் மற்றும் சிறிய செல் சாராத நுரையீரல் புற்றுநோய்களுக்கு, நோயெதிர்ப்புச் சோதனை தடுப்பானான பெம்பிரோலிஸுமாப் சேர்க்கப்பட்டது.
- நுரையீரல் புற்றுநோய்க்கான மாற்று நோயெதிர்ப்பு சிகிச்சை விருப்பத் தேர்வுகளாக அட்டெசோலிஸுமாப் மற்றும் செமிப்ளிமாப் ஆகியவை சேர்க்கப்பட்டன.
- நீரிழிவு நோய் உலகளவில் 800 மில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதிக்கிறது என்ற நிலையில் அவர்களில் பலருக்கு சிகிச்சை அளிக்கப்படவில்லை, அதே நேரத்தில் ஒரு பில்லியனுக்கும் அதிகமானோர் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இருதய அல்லது சிறுநீரக நோய் மற்றும் உடல் பருமனுடன் கூடிய இரண்டாம் வகை நீரிழிவு நோய்க்கு குளுக்கோகன் போன்ற பெப்டைட்-1 (GLP-1) ஏற்பி தூண்டுதல் கூறுகளான செமகுளுடைடு, டுலாகுளுடைடு மற்றும் லிராகுளுடைடு ஆகியவை சேர்க்கப் பட்டன.
- GLP-1 மற்றும் குளுக்கோஸ் சார்ந்த இன்சுலினோட்ரோபிக் பாலிபெப்டைடு (GIP) ஆகியவற்றை இலக்காகக் கொண்ட இரட்டை ஏற்பி தூண்டுதல் கூறான டிர்செபடைடும் சேர்க்கப்பட்டது.
- இந்த மருந்துகள் இரத்தச் சர்க்கரை கட்டுப்பாட்டை மேம்படுத்தவும், இதயம் மற்றும் சிறுநீரகச் சிக்கல்களைக் குறைக்கவும், எடை இழப்பை ஆதரிக்கவும் உதவுகின்றன.
- உலகளவில் 150க்கும் மேற்பட்ட நாடுகளில் முன்னுரிமை மருந்துகளுக்கான மலிவு விலை அணுகலை ஊக்குவிக்க இந்த மாதிரிப் பட்டியல்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுகின்றன.




## HealthAI உலகளாவிய ஒழுங்குமுறை வலையமைப்பு

- சுகாதாரப் பராமரிப்பில் செயற்கை நுண்ணறிவின் (AI) பாதுகாப்பான மற்றும் பயனுள்ள பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக இந்தியா HealthAI உலகளாவிய ஒழுங்கு முறை வலையமைப்பில் (GRN) இணைந்துள்ளது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையின் டிஜிட்டல் சுகாதாரம் மற்றும் தரவு அறிவியல் ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (ICMR - NIRDHDS) மற்றும் IndiaAI ஆகியவை HealthAI

மற்றும் பிற உறுப்பினர்களுடன் இணைந்து பாதுகாப்பு நெறிமுறைகளைப் பகிர்ந்து கொள்ளும்.

- அவை மருத்துவ அமைப்புகளில் செயற்கை நுண்ணறிவின் செயல்திறனைக் கண்காணிக்கும்.
- இந்தியாவின் சுகாதார அமைப்பில் AI நிர்வாகத்தை வலுப்படுத்துவதையும் பொறுப்பான AI ஏற்பினை விரைவுபடுத்துவதையும் இந்தக் கூட்டாண்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளாவிய ஒத்துழைப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் நோயாளிப் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஐக்கியப் பேரரசு மற்றும் சிங்கப்பூர் போன்ற முன்னோடி நாடுகளை HealthAI GRN உள்ளடக்கியுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## UPI பரிவர்த்தனை வரம்புகள்

- இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகம் (NPCI) ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் குறிப்பிட்டச் சரி பார்க்கப்பட்ட வணிக வகைகளுக்கான UPI வரம்புகளை அதிகரித்துள்ளது.
- மூலதனச் சந்தைகள், காப்பீடு மற்றும் அரசு இணையதளச் சந்தைக்கான ஒரு பரிவர்த்தனை வரம்பு 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டு உள்ளது.
- இந்த வகைகளுக்கான 24 மணி நேர ஒட்டுமொத்தப் பரிவர்த்தனை வரம்பு தற்போது 10 லட்சம் ரூபாயாக உள்ளது என்பதோடு இது முந்தைய குறைந்தபட்ச வரம்புகளிலிருந்து அதிகரித்துள்ளது.
- கடன் அட்டை சார்ந்த கொடுப்பனவுகளுக்கான வரம்பு தற்போது, ஒரு பரிவர்த்தனைக்கு 5 லட்சம் ரூபாயாகவும், UPI வழியான பரிவர்த்தனைக்கு ஒரு நாளைக்கு 6 லட்சம் ரூபாயாகவும் உள்ளது.
- கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் EMI போன்ற வசூல்களுக்கும் ஒரு பரிவர்த்தனைக்கு 5 லட்சம் ரூபாய் மற்றும் ஒரு நாளைக்கு 10 லட்சம் ரூபாய் வரம்பு உள்ளது.
- சரி பார்க்கப்பட்ட வணிகர்களுடனான ஒரு நபரிடமிருந்து வணிகருக்குப் பரிமாற்றப் படும் (P2M) பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே இந்த வரம்புகள் பொருந்தும்; இரு

நபர்களுக்கிடையேயான (P2P) பரிவர்த்தனைகளுக்கான வரம்புகள் 1 லட்சம் ரூபாயாகவே உள்ளன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இரத்த/செந்நிற நிலவு





- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 07 ஆம் தேதியன்று இந்தியா முழுவதும் இரத்த/செந்நிற நிலவு என்றும் அழைக்கப்படும் முழு சந்திர கிரகணம் தென்பட்டது.
- பூமியின் வளிமண்டலத்தில் சூரிய ஒளியின் சிதறலால் நிலவின் முழு தோற்றத்தின் போது நிலவு அடர் சிவப்பு நிறத்தில் தோன்றியது.
- இது 2022 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவில் காணப்பட்ட மிக நீண்ட முழு சந்திர கிரகணம் மற்றும் 2018 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் தேதிக்குப் பிறகு நாடு தழுவிய அளவில் காணப்பட்ட முதல் கிரகணம் ஆகும்.
- முழு சந்திர கிரகணத்தின் போது பூமி முழு நிழல் நிலவின் மீது படுவதால் இரத்த நிலவு ஏற்படுகிறது.
- இந்தியாவில் இருந்து காணக் கூடிய வகையிலான அடுத்த முழு சந்திர கிரகணம் 2028

ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று தோன்றும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.


## Future Front Quarterly Insights அறிக்கைத் தொடர்

- நிதி ஆயோக் அமைப்பின் மேம்பட்டத் தொழில்நுட்ப மையம், இரு பரிமாண (2D) பொருட்கள் குறித்த அதன் Future Front Quarterly Insights என்ற அறிக்கைத் தொடரின் நான்காவது பதிப்பை வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்துடன் (IISc) இணைந்து உருவாக்கப்பட்டது.
- இரு பரிமாணப் பொருட்கள் எஃகினை விட 200 மடங்கு வலிமையானவை மற்றும் தாமிரத்தை விட மிகவும் திறம் மிக்க வகையில் மின்சாரத்தைக் கடத்துகின்றன.
- இந்தப் பொருட்கள் மனித முடியின் அகலத்தில் சுமார் 1/80,000 பங்கு ஆகும்.




*Key historical milestones in the development of monolayer-to-few-layer 2D materials and their transition from fundamental discovery to full-chip integration.*

## மெத்தாண்டினோன் LTM





- NIPER கௌஹாத்தி மற்றும் NDTL இடையேயான ஒத்துழைப்பு மூலம், மெத்தாண்டினோன் நீண்ட கால மெட்டாபோலைட் (LTM) என்ற அரிய குறிப்புப்

பொருளை இந்தியா உருவாக்கியுள்ளது.

- இந்தப் பொருள் உட்கொண்ட சில மாதங்களுக்குப் பிறகும் கூட நீண்டகால வளர்சிதை மாற்ற/அனபோலிக் ஊக்க மருந்து பயன்பாட்டைக் கண்டறிவதில் உதவுவதால், ஊக்க மருந்து எதிர்ப்புத் திறன்களை மேம்படுத்துகிறது.
- 2020 ஆம் ஆண்டு முதல் 12 அரிய குறிப்புப் பொருள் உருவாக்கப்பட்டதுடன், இது இந்தியாவினால் உருவாக்கப்பட்டு வரும் 22 குறிப்புப் பொருட்களில் ஒன்றாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ICIMOD அறிக்கை 2025




- ஒருங்கிணைந்த மலை மேம்பாட்டுக்கான சர்வதேச மையம் (ICIMOD) "Together We Have More Power: Status, Challenges, and the Potential for Regional Renewable Energy Cooperation in the Hindu Kush Himalaya" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய-பசிபிக் தூய்மையான எரிசக்தி வாரத்தின் போது இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்து குஷ் இமயமலை (HKH) பிராந்தியத்தில் உள்ள நாடுகள் அவற்றின் மொத்தப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனில் 6.1% மட்டுமே பயன்படுத்துகின்றன.
- இப்பகுதியில் 882 GW அளவிலான மொத்த நீர்மின் திறன் உள்ளது என்பதோடு இதில் 635 GW எல்லை தாண்டிய நதி அமைப்புகளிலிருந்து பெறப்படுகிறது.
- அடையாளம் காணப்பட்ட நீர்மின்னாற்றல் திறனில் சுமார் 49% மட்டுமே தற்போது பயன்படுத்தப் படுகிறது.
- HKH பிராந்தியத்தில் சூரிய மற்றும் காற்றாலை ஆற்றல் திறன் சுமார் 3 டெராவாட் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- HKH பிராந்திய நாடுகளின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளின்படி மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகள் தற்போது 1.7 டெராவாட் ஆகும்.
- HKH பிராந்திய நாடுகளில் மட்டும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 3.5 டெரா வாட்களை விட அதிகமாக உள்ளது.
- பூடான் மற்றும் நேபாளம் ஆகியவை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து 100% மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

- வங்காளதேசத்தில் 98% மின்சார உற்பத்தியிலும், இந்தியாவில் 77%, பாகிஸ்தானில் 76%, சீனாவில் 67% மற்றும் மியான்மரில் 51% மின்சார உற்பத்தியிலும் புதைபடிவ எரிபொருட்கள் பங்களிக்கின்றன.
- நேபாளத்தின் மொத்த முதன்மை எரிசக்தி விநியோகத்தில் (TPES) மூன்றில் இரண்டு பங்கு, மியான்மரின் பாதி பங்கு மற்றும் பூடான் மற்றும் பாகிஸ்தானின் TPES விநியோகத்தில் கால் பங்கு உயிரி எரிபொருள்கள் மற்றும் கழிவுகள் பங்களிக்கச் செய்கின்றன.
- தற்போதைய மற்றும் திட்டமிடப்பட்ட நீர்மின்னாற்றல் திறனில் மூன்றில் இரண்டு பங்கு பனிப்பாறை தொடர்பான அபாயங்களுக்கு உள்ளாகிறது.
- இந்த அறிக்கை "அணைகளுக்கு ஈடானவை/சமமானவை" போன்ற நகர்ப்புற நீர்ச் சேமிப்பு, பருவநிலை-எதிர்ப்புத் திறன் கொண்ட நீர்ப்பாசனம் மற்றும் சூரிய மற்றும் காற்றாலை உள்ளிட்ட பெரிய அணைகளுக்கான நவீன மாற்றுகளை ஊக்குவிக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## நிலக்கரி சுரங்கங்களுக்கான மதிப்பீடுகள்





- NLC இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனமானது, லிக்னைட் மற்றும் நிலக்கரிச் சுரங்கங்கள் 2023-24 ஆம் ஆண்டிற்கான மத்திய நிலக்கரி அமைச்சக கணக்கெடுப்பில் ஐந்து நட்சத்திர மதிப்பீடுகளைப் பெற்றன.
- நெய்வேலியில் உள்ள பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் 1A, ஒடிசாவில் உள்ள தலாபிரா II மற்றும் III நிலக்கரிச் சுரங்கங்கள் மற்றும் இராஜஸ்தானில் உள்ள பார்சிங்கர் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் ஆகியவை ஐந்து நட்சத்திர மதிப்பீடுகளுடன் முதல் இடத்தைப் பிடித்தன.
- நெய்வேலியில் உள்ள NLCIL நிறுவனத்தின் பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்கள் I மற்றும் II ஆகியவை நான்கு நட்சத்திர மதிப்பீடுகளைப் பெற்றன.
- நிலக்கரி அமைச்சகத்தின் நட்சத்திர மதிப்பீட்டுக் கொள்கை சுரங்கச் செயல்பாடுகள், சுற்றுச்சூழல், தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொள்வது, பொருளாதாரச் செயல்திறன், மறு வாழ்வு, பணியாளர் இணக்கம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட ஏழு அளவுருக்களின் அடிப்படையில் சுரங்கங்களை மதிப்பிடுகிறது.

# முக்கிய தினங்கள்

## ஆசிரியர் தினம் 2025 - செப்டம்பர் 05

- இந்தத் தேதியானது டாக்டர் சர்வப் பள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- சுதந்திரத்திற்குப் பிறகு அவர் யுனெஸ்கோவில் இந்தியாவின் பிரதிநிதியாகப் பங்கு பெற்றார் என்பதோடு பின்னர் 1952 ஆம் ஆண்டில் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- அவர் 1962 முதல் 1967 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் குடியரசுத் தலைவராகப் பணி ஆற்றினார்.
- 1954 ஆம் ஆண்டில் பாரத ரத்னா விருது பெற்றார் இவர் 27 முறை நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டார்.




# இதரச் செய்திகள்

## குகி-சோ குழுக்களுக்குப் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் நிலை

- குகி-சோ கிளர்ச்சிக் குழுக்கள் ஆனது, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று மணிப்பூர் அரசு மற்றும் உள்துறை அமைச்சகத்துடன் செயல்பாடுகளை நிறுத்தி வைக்கும் (SoO) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- எதிர்காலப் பேச்சுவார்த்தைகள், குகி-சோ பகுதிகளுக்கான சட்டமன்றத்துடன் கூடிய ஒன்றியப் பிரதேசத்திற்கான கோரிக்கையில் கவனம் செலுத்தும்.
- 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற இன வன்முறைக்குப் பிறகு, இந்தக் கோரிக்கை உள்ளூர் சுயாட்சி என்ற கோரிக்கையிலிருந்து ஒன்றியப் பிரதேசத்திற்கான கோரிக்கையாக மாறியது.
- குடியரசுத் தலைவர் ஆட்சி விதிக்கப்படுவதற்கு முன்பு, 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 29 ஆம் தேதியன்று மணிப்பூர் அரசு இந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகியது.


Union Govt to Sign SoO Pact
With Kuki-Zo Insurgent Groups Amid
'Separate Administration' Demands

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆